
மில்க்வைற் செய்தி
Milk White News


தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1981 ★ இதழ் - 70

# மகாத்மா காந்தி அடிகளை நினைப்போம்



பாரத மக்கள் மகாத்மா காந்தியடிகளை என்றும் நினைவிற்கொண்டிருத்தல் தகும். அவர் அந்நிய ஆட்சியிலிருந்து பாரதநாட்டை விடுவித்தவர். சுயராச்சியம் எப்படி அமைந்து நிலவ வேண்டும் என்று இராமராச்சியத்தை மனதிற்கொண்டு ஓர் அரசை நிர்ணயித்தார். இன்னும் சாசுவதமான வாழ்க்கைத் தத்துவத்தையும் அவர் வடித்துக்காட்டினார். சமூகப் பிரச்சினைகளையும் பெரிய சிக்கல்களையும் அமைதியாகவும் எளிமையாகவும் அவர் அந்தராத்மா என்னும் மனச்சாட்சிக்கு மாறுபடாமல் தீர்த்துவைத்தார். மிகவும் நல்லவராகவும், மாந்தருள் தெய்வமாகவும் அவர்வாழ்ந்து காட்டியதை உலக மக்கள் உவந்து மதித்தனர். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதில் அசையாத நம்பிக்கைகொண்டிருந்த காந்தியடிகள் கடவுளை நம்பி வாழப் பழக்கினார்.



உருத்திரபுரத்தில் குருகுலத்தில், சர்வசக்தி நிலையப் பிரதிஷ்டா கும்பாபிடேகத்தில் வடிவேற் சுவாமிகள் உரையாற்றுங் காட்சி.

கடவுள் இதயத்திலே இருக்கிறார் என்பதை விஞ்ஞான உலகில் அவர் விளக்கிக்காட்டினார். அவருடைய வலிமைக்குக் கடவுள் நம்பிக்கையே மூலகாரணம் என்பதை அளப்பருஞ் சாதனைகளைச் சாதித்து விளக்கினார். கடவுள் தம்மருகே இருந்ததாக அவர் கண்டு காட்டியதோடு, சத்தியமே அஹிம்சை என்று அதனைக் கடைப்பிடித்துக் காட்டினார். காந்தீயவழி எல்லோருக்கும் இன்றியமையாத பொது நெறி.

★ நடத்தை என்பது ஒருவன் இயல்பைக் காட்டும் கண்ணாடி ★

உ
சிவமயம்



## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருமருகல் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

திருமருகல் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரான் திருவடிகளை வாழ்த்தி வணங்கினுல் தவம் பெருக்கலாம். அறியாமை நீங்கிச் சிந்தை திருத்தலாம். மேலானதோர் இன்பத்தை உணரலாம்.




### வான்சிறப்பு - மழையின் சிறப்பு

(இறைவனின் திருவருளே மழையாகப் பொழிகின்றது. மழையைப் பாடுவதால் திருவருட்சிறப்பினைப் பாடுவதாகும்.)

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி,

உரியகாலத்து மழைபெய்யாது பொய்க்குமாயின், கடல்சூழ்ந்த அகன்ற உலகத்திலே பசி நிலைபெற்று உயிர்களை வருத்தும்.

### IN PRAISE OF RAIN - GRACE

If the rain should fail, hunger would rage in all the wide world girt with the sea.

(சமண சமயத்தவரான இளங்கோவடிகள் மழையைப் போற்றித் தம் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தைத் தொடங்குவார்.)

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலியுலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்.

## அக்டோபர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 2 | வெள்ளி | — | காந்தியடிகள் தினம் |
| 7 | புதன் | — | மகாநவமி, சரஸ்வதி பூசை |
| 8 | வியாழன் | — | விஜயதசமி வித்தியாரம்பம் |
| 9 | வெள்ளி | — | ஏகாதசி விரதம்<br>ஹஜ்ஜுப்பெருநாள் |
| 11 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 12 | திங்கள் | — | நடேசர் அபிஷேகம் வல்லிபுரம் தேர் |
| 13 | செவ்வாய் | — | பூரணை விரதம்<br>வல்லிபுரம் சமுத்திர தீர்த்தம் |
| 16 | வெள்ளி | — | கார்த்திகை விரதம் |
| 17 | சனி | — | ஐப்பசி மாதப்பிறப்பு |
| 23 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 25 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 26 | திங்கள் | — | தீபாவளி |
| 27 | செவ்வாய் | — | அமாவாசை விரதம்<br>கேதாரகௌரி விரதம் |
| 28 | புதன் | — | கந்தசஷ்டி விரதாரம்பம்<br>மெய்கண்டதேவர் குருபூசை |

## தரமுள்ள பப்படம்

தமிழ் வவுனியாவில் செட்டிகுளப்பகுதி உளுந்து விளைவுக்குப் பெயர்போன இடம். உளுந்தை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பப்படம் இங்கேயுள்ள பலநோக்குக் கூட்டுறவாளரின் முயற்சி. இவர்கள் இங்கே ஏறக்குறைய ஐம்பது பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துள்ளமை தொழிலின் விரிவாக்கத்துக்குச் சான்ருகும்.

## கடல்வளம்

தமிழ்நாகரிகத்தில் நானிலங்களுள் கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப் போற்றப்பெற்றதோடு தீம்புனலுலகம் என மதிக்கப்பெற்றது. தமிழர் கண்ட செல்வங்களுள் கடல்படு திரவியங்களும் சிறப்பிடம் வகித்தன. குடாநாடான யாழ்ப்பாணத்தின் கடல்வளம் தலையாயது. யாழ்ப்பாணத்தின் வளம் கடல்வளமும் பனைவளமும் என்று மில்க்வைற் தொழிலதிபர் நீண்டகாலமாகப் பிரசாரஞ் செய்து வருகின்ருர். யாழ்ப்பாண மாவட்டத்தில் தரமான உப்பு விளைவது உலகறிந்த உண்மையாகும்.

உலகப்புகழ் பெற்ற ஜப்பானிய மீன்பிடி நிபுணர்கள் இலங்கையின் மீன்வளத்தைப்பற்றி ஆராய்ந்து எழுதிய அறிக்கையில் கரையூர், பருத்தித்துறை, காங்கேயன்துறை, வேலணை முதலிய இடங்களை வியந்து கூறியுள்ளார்கள்.

★ தானே தன் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணம் ★

## மாதிரிப்பண்ணைகள்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இங்கொன்று அங்கொன்ருக விவசாய அபிவிருத்திக்கான மாதிரிப்பண்ணைகள் அமைந்திருந்தன. சுதந்திர ஆட்சியில் ஐந்தாண்டுத் திட்டம், கொழும்புத்திட்டம் முதலாய திட்டங்கள் நடைமுறைக்கு வந்தபோதெல்லாம் மாதிரிப்பண்ணைகள் எங்கும் உருவாக வழிபிறந்தது. விவசாயம் என்னும் கமத்தொழிலபிவிருத்தியில் நெல், பருத்தி, உருளைக்கிழங்கு கரும்பு, புகையிலை, மிளகாய் முதலியன வளம்பெற்றதோடு பாற்பண்ணை, கோழிப்பண்ணை, பன்றி அபிவிருத்தி முதலியனவும் இடம்பெற்றன.

பாற்பண்ணைகளில் நம்நாட்டுப் பசுக்களோடு யேசி, சிந்தி, அயசயர், காங்கயன், பிரிசியன், கில்லார், கட்டைக்கொம்பன் முதலிய பிறநாட்டினங்களும் இங்கே விருத்தியடைந்தன. சராசரியாகப் பதினெட்டுப் பைந்து பால் தரும் பசுக்களும் நம்நாட்டிற் பரவின.

தம்பலகாமம், அம்பேவல, போகவந்தலாவை, பொலநறுவை, இரிதியகம, நிக்கவரட்டியா, வெலிசறை முதலான இடங்களையொத்து யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியும் இடம்பெற்றுள்ளது.

விவசாயத்துறையில் பிரமிப்புக்குரிய முறையில் ஆழக்கிணறுகளில் அரும்பாடுபட்டு நீர் இறைத்துப் பயிர்செய்யும் சுறுசுறுப்புள்ள தமிழர் ஒரு காலத்தில் வெங்காயச் செய்கையில் பெருவெற்றியீட்டியவர்கள். ஒருமுறை 5,41,103 அந்தர் வெங்காயம் உற்பத்தி செய்ததோடு தீவுப்பகுதி மக்கள் 48265 ரூபா பெறுமதியான வெங்காயக் கூடுகளையும் செய்தனர். பனையபிவிருத்தி பேசும் பெரியவர்கள் அடைவியன் ஓலையினுல் இத்தனை வருமானத்தை அறிதல் நன்று.

யாழ்ப்பாணத்தார் மிளகாய், குரக்கன், புகையிலை, மரவள்ளி, இராசவள்ளி, கருணைக்கிழங்கு முதலியன உற்பத்தி செய்வதிலும் திறமையுள்ளவர்கள். புதிதாக அறிமுகம் செய்யப்பெற்ற திராட்சைச் செய்கையில் பெருவெற்றியீட்டியவர்கள்.. நாட்டின் பிரதமர்களுள் ஒருவரான ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக அவர்கள் உரும்பராயின் திராட்சை வளத்தை வியந்து பாராட்டியுள்ளமை தெரிந்ததே.

## நெல்லி

அமிழ்துவினை தீங்கனி என்றும் நெல்லியம் தீங்கனி என்றும் புகழ்பெற்ற நெல்லிக்காய் சாதாரணமாக எங்கும் கிடைக்கும். அதன் உணவுச்சத்து அதிகம். நோய்கள் வராமல் தடுக்கும் அளவுக்கு ஆற்றல் தரும் அருங்கனி நெல்லி. இதனை இரவிலும் அமாவாசை நாளிலும் உண்ணக்கூடாது என்பர். ஏகாதசியன்று பட்டினி கிடந்தவர்கள் துவாதசியன்று இதனை உணவிற் கலந்துகொண்டால் ஆற்றல் அதிகம் பெற்றவர் என்பது பழைய கதை. சியவன முனிவர் வயோதிப காலத்தில் இதனை நன்கு பயன் செய்து உண்டு இளமைபெற்ருர் என்பதால் இதற்கு சியவன பிராசனம் என்னும் பெயரும் உண்டு.

## மேற்காசியாவில் பாரதநாட்டுச் சோதிடக்கலை

இந்துப்பண்பாட்டில், இந்துநாகரிகத்தில் சோதிடக்கலையும் இடம்பெற்றிருந்தது. இந்தியாவுக்கேயுரிய சோதிட நூல்கள் இரண்டு மேற்காசியாவில் பரந்து அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் போனமை வரலாற்றுண்மை. இந்துப்பண்பாட்டுக்குப் புகழ்பெற்ற சிந்துவெளியில் ஏழாம் நூற்ருண்டில் புகுந்த அரேபியர், தளபதி பின் காசிம் மூலம் செல்வாக்குப் பெற்ருர்கள். அங்கிருந்தவாறே அவர்கள் அக்காலத்தில் புகழ்பெற்று நிலவிய பாக்தாத் நகருடன் தொடர்புகொண்டார்கள். எட்டாம் நூற்ருண்டில் 763—764 வரை அரசு செலுத்திய காலிஃப் மன்சூர் அலி என்பார் காலத்தில் இந்திய சோதிடர் இருவர் பிரம்ம சித்தாந்தம், கண்டகத்யகா என்னும் நூல்களை பாக்தாத்துக்கு எடுத்துச்சென்றனர். அங்கிருந்து அவை வேறுநாடுகளுக்குப் படியெடுத்துப் பரப்பப்பெற்றன.

—ஆதாரம்: பாலஜோதிடம்

## மரம்வளர்க்க ஒரு மனம்வேண்டும்

மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களின் பனையபிவிருத்திப் பணியைப் பாராட்டிய மாவட்ட அபிவிருத்திச் சபைப் பிரதிநிதி தம்பிமுத்து அவர்கள் இதற்கு ஒருவகை விசர்க்குணம் அமையவேண்டும் என்ருர். இங்ஙனமாகவே மரம்நாட்டும் பணியினைக் குறிப்பிட்ட தமிழ் நாட்டு வளரும் வேளாண்மை ஆசிரியர் வெங்கடராமன் அவர்கள் மரம் வளர்க்க ஒரு மனம் வேண்டும் என்ருர். ஒருமனம் ஒருமரந்தான் வளர்க்கவேண்டுமென்பதில்லை. வசதியானுல் ஓராயிரம் மரங்களையே வளர்த்துவிடலாம்.

தொழிலதிபர் கனகராசா அவர்கள் முயற்சி எடுத்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அண்மையில் நாட்டிய மரங்கள் வரிசையாக நின்று நிழல்தரத் தொடங்கிவிட்டன அடுத்துவரப்போகின்ற மழையோடு மலைவேம்பு, வேம்பு முதலிய மரங்களை வீதியோரங்களில் நடுவோமாக. மரம் நாட்டும் பணியில் எல்லோரையும் முந்தியடித்து முதலில் அணிவகுத்து நிற்கும் சாரண இளைஞர்கள் அணிதிரண்டு மரம் நடுவதற்கு முன்வருவார்களாக. எதற்கும் ஆயத்தமாயிருக்கும் சாரணர் இதற்கும் ஆயத்தமாகுங்கள்.

## அழகின் அலைகள்

சங்கராசாரிய சுவாமிகள் சமஸ்கிருதத்தில் பாடிய சௌந்தர்ய லஹரி என்பதைத் தமிழில் அழகின் அலைகள் என்பர். வட மொழியில் துர்க்கசப்த சதீ, தேவீ பராக்கிரமம், ஸ்ரீ வித்யா முதலிய நூல்கள் தேவியின் பெருமையைக் கூறுவன. தேவி குழந்தையாகவும், யுவதியாகவும் தாயாகவும் காட்சி கொடுப்பவள். அவள் செல்வத்தின் செல்வம்.

வட இந்தியாவில் வாமாசாரம் என்ற முறையில் மது மற்ச மாமிசம் முதலான மகாரங்கள் படைத்தல் தக்ஷிணசாரம் என்னும் தமிழ் நாட்டு ஆசாரத்தில் கிடையா. தேவி வழிபாட்டில் மந்திரங்கள் நிறையவுள்ளன.

★ உழைப்பாளிகளே ஒரு நாட்டின் செல்வம் ★

## கிராமாபிவிருத்தி

அபிவிருத்தியாளர் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டிய கருமங்களுள் ஒன்று கிராமாபிவிருத்தி என்பதாகும். கிராமாபிவிருத்தியால் ஒற்றுமை, சுய உதவி, சூழலை அறிதல், சூழலை நயத்தல், சூழலுக்குத் தகுந்தவாறு தாம் வாழ்தல், நல்லவழியில் வாழப்பழகுதல் முதலியன விருத்தியடைகின்றன.

கிராமாபிவிருத்திச் சேவையில் யாழ்ப்பாணத்தவர் கரைகண்டவர்கள். குடிசைத்தொழில், விவசாயம், சேமிப்புப்பழக்கம், சிக்கனவாழ்வு, கலைகலாசார வளர்ச்சி, பொதுநலப்பணி முதலிய பல துறைகளில் ஆண்களேயன்றிப்பெண்களும் பெரும்பங்குகொண்டு உபகரித்துள்ளனர். பொதுக்கிணறுகள் தோண்டுதல், மண்டபங்கள் அமைத்தல், படிப்பகங்களைப் பராமரித்தல், முதியவர்களுக்குக் கல்வியூட்டல் முதலிய பலதுறைகள் யாழ்ப்பாணத்தில் ஒளிவிட்டிருந்தன.

கிராமாபிவிருத்தித் துறையில் ஈடுபடவிரும்புபவர்கள் சென்றகாலத்துப் பழுதிலாத்திறத்தின் நம்முன்னோர்கள் அவ்வக்காலத்தில் வாய்மொழியாகப் பாடிய பாடல்களைக் கர்ணபரம்பரையாகக் கேட்டு எழுதி நூல்வடிவிற் கொண்டுவருவதற்கு ஆவன செய்தல் அவசியம்.

எங்கள் இளந்தாய்மார்கள் தாலாட்டுப் பாடல்பாடும் வழக்கத்தைப் புறக்கணித்தமையாலும், முதிய தாய்மார்கள் ஒப்பாரி பாடுதலை முற்றாக மறந்தமையாலும் பல நயமுள்ள பாடல்கள் மறைந்துவருகின்றன, இவற்றைப் பேணிக் காத்தல் கிராமாபிவிருத்தியாளர்களின் பொறுப்பாகும்.

கிராமாபிவிருத்தியாளர் குடிசைத்தொழிலை அபிவிருத்தி செய்யும்போது பனம்பொருள் அபிவிருத்தியில் கூடிய சேவை செய்யலாம். தச்சுவேலை, தையல்வேலை உணவு பதனிடுதல், நெசவுவேலை, பிரம்புவேலை முதலிய வற்றோடு சுகாதாரப்பிரசாரமும் செய்து முதலுதவியையும் பழக்கிவிடுதல் நன்று.

முதியவர் கல்விக்கான முறையில் முன்னர் மூலைக்கு மூலை கோயில்களில் பிள்ளையார் கதை, கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணபடனம் செய்யப்பெற்றுவந்தது.

## மகாதேவா தாம்போதி

கேரதீவு சங்குப்பிட்டிக்கிடையில் ஆரம்பிக்கப்பெற்ற தாம்போதிக்கு இன்று 43 வயதாய்விட்டது. இதுவரை அது பூரணமாக அமையவில்லை. அதை நிறைவுசெய்வதற்கு அரசாங்கம் கவனஞ்செலுத்தத் தொடங்கியமை பாராட்டுதற்குரியது. இது நிறைவேறுவதால் யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்கும் நேரடிப்பாதை உண்டாகிவிடும் திருக்கேதீஸ்வரம், மடுத்திருப்பதி, மன்னார், முருங்கன், தலைமன்னார் முதலிய இடங்கள் நெருங்கிய தொடர்பு கொள்ள வசதியுண்டாகும். இராமர் அணைகட்டியபோது அணிற்பிள்ளை உடலுழைப்பு உபகரித்தமைபோல எம்மவர் தங்கள் லொறிகளை ஒரு நாளில் ஒருமுறையாவது கல் விழுக்க உதவினால் பெரிய உபகரிப்பாகும் என்று சொல்லவும் வேண்டுமோ?



## Lord Buddha and The Eight - fold Path

1. **Right Understanding** (free from superstition and delusion.
2. **Right Thought** (high and worthy of the intellegent.)
3. **Right Speech** (kindly, open, truthful.)
4. **Right Actions** (peaceful, honest, pure.)
5. **Right Livelihood** (bringing hurt or danger to no living being.)
6. **Right Effort** (in self-training and self-control.)
7. **Right Mindfulness** (the active waterfull mind.)
8. **Right Concentration** (in deep meditation on the realities of life.)

## முன்வருவீர்களா?

### வழியோரம் பனைமரம்

யாழ்ப்பாணம் பண்ணை வழியாகக் கடற்பாதையைத் தாண்டியபின் மண்டைதீவு தொடக்கம் ஊர்காவற்றுறை வரையும் சாலையோரத்தில் நிரையாக இருமருங்கும் பனம் விதைகளை நாட்டி வளர்த்துவிட்டால் அற்புதமான காட்சியாயும் அழகாயும் பிரயோசனமுள்ளதாயும் அமையும். இடையிடையே பூவரசு, பொன்னுவரசு நட்டு அழகுபடுத்தலாம். ஆங்காங்கேயுள்ள கிராமாபிவிருத்திச் சங்கங்கள் கிராம சேவையாளர்கள் சிலகாலம் மேற்பார்வை செய்தால் போதுமானது. வசதியான இடங்களில் பயன்தரும் புளியமரங்களையும் உண்டாக்கலாம்.

இங்ஙனமே பருத்தித்துறை வீதியிலும், சாவகச்சேரி கழிந்தாற்போலுள்ள நெடுஞ்சாலையிலும் நட்டு உண்டாக்கிவிடலாம். இதைப்பற்றி ஊக்கம் எடுக்கவல்ல இளைஞர்கள் தயவுசெய்து சங்கங்கள், மன்றங்கள் மூலம் கலந்துரையாடியபின், மில்க்வைற் தொழிலதிபருடன் தொடர்புகொள்ளுங்கள். முன்னர் யாரோ நல்லவர்கள் சாவகச்சேரி மீசாலைவரை கறிமுருங்கை நாட்டி வளர்த்தமை பாராட்டற்பாலது.

## பொன்முட்டை

எங்கே நல்லவர்களும் நேர்மையுள்ளவர்களும் இருக்கிறார்களோ அங்கே தொட்டதெல்லாம் பொன்னாகும். ஆனால் சோசலிசம் வாயளவில் பேசும் இடங்களில் பொன்முட்டை கிடையாது என்று இராஜாஜி கூறினார்.

★ நல்ல நகைச்சுவைப் பேச்சு நண்பர்களை அணைக்கும் ★

## உங்களுக்குத் தெரியுமா?

விடைகள் வேறிடத்தில்

1. இலங்கையின் விஜயராஜபுரம்
2. இலங்கையின் மலைநாட்டுப் புல்வெளியின் பெயர்
3. இஸ்றேல் நாட்டின் முதற் பிரதமர்
4. மயக்கமருந்தை முதலில் பயன்படுத்தியவர்
5. மரவள்ளிக் கிழங்கு அதிகமுள்ள நாடு
6. அதிக கம்பளி உதவும் நாடு
7. தொடர்பாய் நான்குமுறை ஜனாதிபதியாயிருந்த அமெரிக்கர்
8. வானவெளியில் பிரகாசமுள்ள நட்சத்திரம்
9. பர்மாவின் பழைய தலைநகரம்
10. இரட்சணிய சேனையைத் தாபித்தவர்
11. சிங்கள நடனத்தில் பெயர்பெற்றவர்
12. சோக்கிறட்டீஸ் ஞானியின் பிரதம சீடன்
13. யூதரின் பேராசிரியருக்கு வழங்கும் பெயர்
14. தக்காளி இருந்துவந்த நாடு
15. உவைன் பானம் அதிகமுள்ள நாடு
16. வைரத்துக்கு அடுத்தபடி விலையுள்ளது
17. சிசிலியின் அடுத்த பிரதேசம்
18. நாடுகள் அதிகமுள்ள கோளார்த்தம்
19. சுயெஸ் கால்வாய்மூலம் பிரபலிக்கம் பெற்ற கடல்
20. உவாசிங்ரன் நகரம் அமைந்த நதி
21. எகிப்திய தேசாதிபதிக்கு வழங்கும் பெயர்
22. யப்பானியரின் சமயத்தின் பெயர்
23. மருந்தில்லாமல் நோய் நீக்கும் வழி
24. ஐரோப்பாவில் தேயிலையைப் பழக்கியவர்
25. சிங்கப்பூருடன் பாலத்தால் இணைந்த மலாய் நகரம்

## மில்க்வைற் செய்தி இலவசம் முக்கிய வேண்டுகோள்

பாடசாலைகளுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் எங்கள் மில்க்வைற் செய்தி இலவசமாகக் கிடைக்கும். ஆனால் ஒன்று.

1982ம் ஆண்டு தொடக்கம் மில்க்வைற் செய்தி தேவையான பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் தங்கள் விலாசத்தைப் புதிய இடாப்பில் பதிவதற்கு எழுதி அனுப்புங்கள். இன்னும் தபாற்செலவை நீங்களே பொறுத்துக்கொள்ளவேண்டுமாகையால், தயவுசெய்து ஏதாவது வழியைக் கைக்கொள்ளுங்கள்.

**குறிப்பு:** இங்ஙனஞ் செய்யத்தவறினால் 1982 தொடக்கம் செய்தியை அனுப்ப இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

## காமராஜர் நல்ல தலைவர்

பிரதமர்களை நியமிக்கும் ஆற்றல்வாய்ந்த தமிழன் என்று அமெரிக்கர் பாராட்டிய காமராஜர் உருவில் ஒருவராய் இருந்தாலும் உள்ளத்தில் அவர் மகாத்மா காந்தி அடிகளையும் சர்தார் வல்லபாய் படேல் அவர்களையும் இணைத்தவர். தமிழகத்தின் முதலமைச்சராய்த் திறமை காட்டியவர். அதிகம் பேசாதவர். பேசாமலே சாதனை செய்தவர். காங்கிரஸ் கட்சியைத் தமிழ்நாட்டில் பட்டுப் போகாமல் காப்பாற்றியவர்.

## உப்புச்செய்கை

நாளாந்தம் சமையலில் உபயோகமாகும் உப்பு கைத்தொழிலபிவிருத்தியில் அதிகமாகப் பயன்தருகிறது. கடல் நீரைப் பாத்திகளில் காயவிட்டுத் தயாரிக்கும் உப்பு உலர் வலயத்தின் வரப்பிரசாதம். உப்புக்கும் யாழ்ப்பாணத் தாருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. யாழ்ப்பாணத்தில் பலவிடங்களில் தானே தன்படுவனும் உப்புவிளையும் இடங்கள் பலவுள்ளன.

இலங்கையில் ஏறக்குறையப் பதினைந்து இடங்களில் உப்பு விளைகிறது. அவற்றுள் ஆனையிறவு அதிக விளைவைத் தருவதால் அயலில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ளது. இரசாயனத் துறையில் மக்னீசியா, கிப்சம், பொற்ரூஸ், பொருக்ஸ், கிளேபேர்ஸ், எப்சம் முதலியன உப்பிலிருந்து செய்யப்பெறுகின்றன. பரந்தனில் கோஸ்ரிக் சோடா பெருந்தொகையாக உற்பத்தியாகிறது. எங்கள் நாட்டில் சராசரி 50,000 தொன் உப்பு ஆண்டுதோறும் உண்டாகிறது.

யாழ்ப்பாணத்தில் அரியாலை, செம்மணி, கரணவாய் அராலிமுதலிய இடங்களில் உப்புவிளைவது வழக்கம். உப்புச் செய்கை 1920ம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் ஏகபோக உரிமை என வெள்ளைக்காரர் விதித்தமை விந்தைக்குரியதாகும். இயற்கை தரும் கடல்படு திரவியங்களுள் உப்பு சாதாரணமானது.


## பம்பாய் வெங்காயம்

தரமான பம்பாய் வெங்காயம் தமிழ்பேசும் வவனியாவில் பூவரசங்குளத்தடியில் இளைஞன் ம. பாலச்சந்திரன் முயற்சியால் நன்கு விளைந்து விற்பனையாகிறது. இவர் கமத்தை நேரிற்பார்த்த நாம் இவர் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறோம். பரந்த நிலப்பரப்புள்ள வவனியாவில் இன்னும் பலர் பம்பாய் வெங்காயம் செய்தால் நாட்டுத் தேவை பூர்த்தியாகலாம்.

## நீரினூற் பரவும் நோய்கள்

''நீர்கருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி உண்பவர் தம் பேர் உரைக்கப் போமே பிணி'' என்பது பாடல். நீரை நன்றாகக் கொதிக்கக் காய்ச்சி வடித்து ஆறவிட்டுக் குடித்தல் நல்லது. நீர் சுத்தமில்லாவிட்டால் வாந்திபேதி, விஷசுரம், வயிற்றுக்கடுப்பு, பேதி முதலிய நோய்கள் உண்டாகி உபத்திரவந்தரும்.

**பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு**



## பஞ்சதந்திரம்

நல்ல கவிதையையும் அறநூல்களையுங் கொண்டு அறிவாளிகள் பொழுதைக் கழிக்கின்றனர். மூடர்கள் துயரத்திலும் துக்கத்திலும் கலகங்களிலும் தங்கள் பொழுதைக் கழிக்கின்றனர். நல்லுரைகளைப் பருகி நல்லவர்கள் விவேகிகள் புளகாங்கிதம் அடைகின்றனர்.

நண்பர்களின் சேர்க்கை அருமருந்து போன்றது. நல்ல நண்பன், அன்புள்ள மனைவி, அனுதாபம் உள்ள எஜமானன் இவர்களிடம் துயரத்தை வெளியிட்டால் மனச்சாந்தி உண்டாகும்.

ஒரு துயரத்தின் முடிவை எட்டியதும் இன்னொரு துயரம் தொட்டுக்கொள்கிறது. எளியாரைத் துயரங்கள் அதிகமாக வாட்டுகின்றன. பட்ட இடத்தில்தான் மீண்டும் அடிபடுகிறது. சோறில்லாதபோதுதான் பசி அதிகமாகின்றது.

ஆபத்தில் உதவுகின்ற நண்பன், வலிமையும் லாவகமும் உள்ள வில், குணமும் குலமும் பொருந்திய மனைவி எல்லோராலும் காணமுடியாது.

நண்பனிடம் பெறும் நிம்மதியைப்போல் தாயிடமோ, மனைவியிடமோ, மகனிடமோ, சகோதரனிடமோ பெற முடியாது. நல்ல நண்பன் வாய்ப்பது ஒருவரின் பாக்கியம். நட்பு நஷ்டம் ஒருவரை வெகுவாக வாட்டும்.

## கிருஷ்ணமேனன் வீரத்தியாகி

சுதந்திரம் பெற்ற இந்தியா உலகப்புகழ் பெறமாட்டாது என்று பிரதமர் சேர்ச்சில் சாத்திரஞ் சொன்னவர். இந்தியா உலகப்புகழை மாத்திரமல்ல பெருமதிப்பையும் பெறுவதற்கு உளவலிமையால் உழைத்த ஒப்புயர்வற்ற தியாகச் செம்மல் தமிழ்நாடு தந்த வேங்காலி கிருஷ்ண மேனன். சாக்கிரடீஸ் அறிஞனுக்கு வாய்த்த பிளேட்டோவைப்போல இந்திய தத்துவத்தை உலகறியச் செய்தவர் மேனன்.

## குருவை விஞ்சிய வீரன்
## ஹாக்கி வீரன் தயான்சந்த்

அலகபாத் நகரில் பிறந்த தயான்சந்த் ஆங்கிலேயரிடம் பயின்ற அவர்களது விளையாட்டை அற்புதமாக ஆடி உலகப்புகழ் பெற்றதோடு, இந்தியாவின் படத்தை உலகத்தில் கணிக்கச்செய்த வீரன் - தலைவன் - நிபுணன். ஒலிம்பிக் புகழினன்.

## யாழ்ப்பாணக் கோட்டை

பழையகாலத்து மன்னர் கோட்டை கொத்தளங்கள் கட்டுவதில் புகழ்பெற்றவர்கள். கோட்டை கட்டுங்கலை கிழக்கு நாடுகளிலும், மேற்கு நாடுகளிலும் நிலவிவந்துள்ளது. சேர சோழ பாண்டியர் கோட்டைகளும் அகழிகளும் அமைத்தமை சங்கப்பாடல்களில் அறியக்கிடக்கிறது மன்னாரையடுத்த மாதோட்டத்தில் மிகப்பழைய காலத்தில் ஒரு காந்தக்கோட்டை இருந்ததென்று யாழ்ப்பாணப் புலவரான இராமசுந்தரப் புலவர் விசுவகர்ம நாடகத்தில் பாடியுள்ளார். ''காந்தமலைக் கோட்டை மேவிய காவன மன்னன் புகழ் கூறவே'' இதை 450 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சிதம்பரதாண்டவ மதுரகவிராயர் தமது மாந்தைப் பள்ளில் ''காந்தமுறுந் தடமதிலும் கமழுமலர்ப் பொழிலுமுற்ற மாந்தைநகர்'' என வழிமொழிந்து பாடுவர். இன்னும் சிதம்பரக் கவிராயர் என்பார் தமது விசுவ புராணத்தில்,

''உத்தரதிக்கின் மிக்க ஊசிக்காந் தத்தினாலே
சுற்றிலு மகலநாலைந் தோசனை தூரமுள்ள
முத்திரை மிகுந்த கோட்டை
சிருட்டித்தார் முன்தினத்தில்'' எனப் பாடுவர்.

இலங்கைக் கரைநாடுகளைப் போத்துக்கேயர் கையாண்ட காலத்தில் ஆங்காங்கே கோட்டைகளைக் கட்டினார்கள். அவர்கள் சில இடங்களில் செங்கட்டிகளால் கட்டிய கோட்டைகளைப் பின்னர் கருங்கற்களாலும் முருகைக் கற்களாலும் கட்டினர். அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தர் கோட்டைகள் அமைப்பதில் நிபுணராயிருந்தனர்.


இலங்கையில் இன்று கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, மன்னார், காலி, யாழ்ப்பாணம், பூநகரி முதலிய இடங்களில் பழைய கோட்டைகள் உள்ளன. இவற்றுள் யாழ்ப்பாணக் கோட்டையே பெரியதும் சிறந்ததும் பாதுகாப்பானதுமாகும்.

பழையகாலத்தில் குடியிருந்த வீட்டைப் பாதுகாப்பதற்கு வேலியடைத்து நாயை வளர்த்தனர். எயினர் என்னும் மக்கள் முள்வேலி அடைத்தமை சங்கப்பாடல்களில் வருகின்றது. முள்வேலியைச் சூழக் காவற்காடுகள் அமைத்தனர். நெடிய கமுமரங்கள் அங்கும் இங்கும் பகைவரைப் பயமுறுத்த அமைக்கப்பட்டன.

கோட்டைகளை அமைத்தவர்கள் குறுநில மன்னர்கள். மன்னர்கள் என்றித்திறத்தவராவர். சில இடங்களில் மலைகளே இயற்கை அரண்களாக இருந்தன. மலைகளில்லா விடத்தில் மதில்களை அமைத்தனர். மதில்களை இஞ்சி என்றும் எயில் என்றும் வழங்கினர். மத்தியகிழக்கில் தொங்குதோட்டம் போலத் திருக்கேதீச்சரத்தை யடுத்த மாந்தையில் தூங்கெயில் இருந்ததாகப் பழைய பள்ளுப் பிரபந்தம் பாடுகிறது. தூங்கெயிலைத் தொடித்தோட் செம்பியன் என்பவன் ஒடித்ததாகப் பாடல்களும் உண்டு.

எயில்களைச் சூழ நீர்நிலைகள் அகழிகள் என்ற பெயரில் முதலைகள் வாழுமிடமாயிருந்தன. பலவித உலோகங்களை உருக்கி நிறைத்துவைத்திருக்கும் கொதிகலன்களும் பகைவரை எச்சரித்தன. இன்னும் பகைவரைக் குத்திக் காயப்படுத்தி வதைக்கும் பல்வேறு வகைப்பட்ட பொறிகள் ஆயுதங்களும் இருந்தன. ★

★ உண்மையைக் கூறுவதற்கு உவமானம் தேவையில்லை ★



# காந்தியடிகள் தோன்றினர்

## காலநிலை

வடஇந்தியாவில் ஜெகங்கீர் என்பார் அதிகாரமுள்ள சக்கரவர்த்தியாய் இருந்தகாலத்தில் சேர் தோமஸ் ரோ என்னும் ஆங்கிலேயர், தாங்கள் வியாபாரஞ் செய்வதற்கு ஓரிடம் பெற்றார்கள். நாளடைவில் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கம் வளர்ச்சிபெற்று 1775ம் ஆண்டில் கிளைவ் என்னும் வீரன் தலைமையில் வங்காள நவாப் மன்னனை வென்று ஆளும் அதிகாரம் பெற்றது. இந்த வெற்றியே பிளாசி யுத்த வெற்றியென சரித்திரப்புகழ் பெற்றுள்ளது.

கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஆட்சிசெய்த முறையினை வெறுத்த இந்தியர் 1857ம் ஆண்டில் கலகஞ்செய்தபோது பிரித்தானியர் படைகளைக்கொண்டு கலகத்தை அடக்கி ஆட்சிப்பொறுப்பை வர்த்தக சங்கத்தாரிடமிருந்து பெற்று நேரடியாக ஆண்டுவந்தார்கள்.

## காந்திக்குடும்பம்

மேற்கு இந்தியாவில் கடற்கரைப் பிரதேசத்தில் போர்பந்தர் நகரில் வைசியர் குடும்பத்தவரான காபா என்னும் கரம்சந்ர காந்தி புத்லிபாய் என்னும் பெண்ணை மணந்து மூன்று ஆண்குழந்தைகளையும் ஒரு பெண்குழந்தையையும் பெற்று வாழ்ந்தார். கடைக்குட்டி 2-10-1869ல் தோன்றி மோகன்தாஸ் கரம்சந்ரகாந்தி எனப் பெயர் பெற்றார். அவர் அதனை எம். கே. காந்தி எனச் சுருக்கி எழுதுவது வழக்கம்.

## சுதந்திரப் பாதை

இருதய சுத்தமுள்ளவராய் இந்திய சுதந்திரத்துக்கு வழிகண்ட காந்தியடிகள் ஒருமுறை இராசப் பிரதிநிதியிடம் உப்புவரி, மருந்துவரி முதலியவற்றை நீக்குமாறு விண்ணப்பித்தார். இராசப்பிரதிநிதி மறுக்கவே, காந்தியடிகள் தமது 61ம் வயதில் புகழ்பெற்ற சத்தியாக்கிரகத்தையும் தண்டி யாத்திரையையும் ஆரம்பித்தார்: உலகம் முழுவதும் 12-3-1930ம் நாளை ஆவலுடன் கவனித்தது. காந்தி அடிகள் 79 தொண்டர்களுடன் 200 மைல் தூரம் கால் நோக நடக்க ஆரம்பித்தார். சபர்மதி ஆச்சிரமம் தொடக்கம் தண்டிக் கடற்கரைவரை அவர் நடந்தபோது வழியோரம் ஆயிரம் ஆயிரமாக மக்கள் தொடர்ந்தனர். வழியெங்கும் வாழ்ந்த 300 கிராமசேவகர்கள் தங்கள் அரசாங்க உத்தியோகத்தை உதறிவிட்டுப் பின் தொடர்ந்தனர். பொலிஸ் படையினர் குண்டாந்தடியால் தோளை முறித்து மண்டையைப் பிளந்தபோதும் தொண்டர் புன்முறுவல் பூத்தவண்ணம் பின்தொடர்ந்தனர்.

## சுதந்திரம் மனத்தில் உதயமாதல் வேண்டும்

தண்டியை நோக்கிப் பாதயாத்திரை செய்த காந்தியடிகளும் தொண்டர்களும் 24 நாட்கள் 5-4-1930ல் தண்டியை அடைந்தார்கள். இரவு முழுவதும் உண்ணாவிரதமிருந்து பிரார்த்தனை செய்தார்கள். அடுத்தநாள் அதிகாலையில் சமுத்திரத்தில் நீராடித் தூய்மையான இதயத்தோடு உப்புக் காய்ச்சினார்கள். உப்புக் காய்ச்சுதல் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாதலால் அது செய்வதால் சாத்வீக முறையில் சட்டத்தை மீறுதலாகும். பெருவலி படைத்த பிரித்தானியப் பேரரசை எதிர்த்து உப்புக் காய்ச்சிய மக்கள் உள்ளத்தில் சுதந்திரம் உதயமாயிற்று. வற்றி உலர்ந்த உடம்பினராய வயதுபோன காந்தி ஒருசில உப்புப் பருக்கைகளை எடுத்தமை சுதந்திரம் பெற்றமைக்கு அறிகுறியாயிற்று. அதனால் தேசமக்களின் சம்மதமின்றி ஒருவர் அந்நாட்டை ஆளமுடியாது என்று அதிர்ச்சியடைந்த உலகுக்குக் காந்தியடிகள் உணர்த்தினர். அவரைத்தொடர்ந்து நாடுநகரமெங்கும் மக்கள் உப்புக் காய்ச்சி விற்கத் தொடங்கினார்கள். இயற்கையன்னை எங்கும் எல்லோருக்கும் இலவசமாக உபகரிக்கும் உப்பினை ஆங்கிலேய அரசு ஏகபோக உரிமை கொண்டாடிய அதிகாரத்தைக் காந்தியடிகள் ஏளனஞ்செய்தாற்போல் எதிர்த்துக் காட்டினர்.

## ஆயிரம் பிறையும் பேரனின் பிள்ளையும்

ஆயிரம் பிறை காண்டலும் பேரனின் பிள்ளையைக் காண்டலும் பெரியபேறு என்று இந்துப் பண்பாட்டாளர் கருதுவர். நீண்டகாலம் புத்திக் கூர்மையோடு, கண்ணொளி மங்காமல் கைகால் வழங்க வாழ்தல் பெரிய பேறு. மனிதருக்கு வயது நூறு என்று வேதங்கள் வாழ்த்துகின்றன.

இந்தவகையில் எண்பத்திரண்டு வயது நிரம்பிய எங்கள் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா தமது பேரன் முறையினரான சதாசிவம் அவர்களின் மைந்தனுக்கு வித்தியாரம்பம் செய்து அடிப்படை நூல்களும் கற்பித்து வருகிறார்கள். கிழவனார் பீட்டப்பிள்ளைகளோடு செல்லமாக விளையாடுவதும் காண்பவருக்குச் சிந்தைநிறைவைத் தருகிறது.

## உருளைக்கிழங்கு

இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் உருளைக்கிழங்கு செய்யலாம் என்று நிபுணர்கள் கண்டுபிடித்தபோது அதற்கு 5000 அடி உயரமுள்ள பூமியே உகந்ததென்றும் பீதுருதாலகால மலை அல்லது ஹோட்டன் பீடபூமியிலே அதைப் பயிரிடவேண்டுமென்றும் கருதினார்கள். அவர்கள் கருத்தைத் தவிடுபொடியாக்கிய யாழ்ப்பாணக் கமக்காரர்கள் தங்கள் தோட்டங்களில் தரமான உருளைக் கிழங்கை உற்பத்திசெய்தார்கள். ஊக்கமிருந்தால் ஏக்கருக்கு பதினான்கு தொன் கிழங்கு விளைவிக்கலாம்.

★ அநுபவத்தைவிடச் சிறந்த ஆசிரியன் இல்லை ★



## ஔவை அருந்தமிழ்

### கொடுத்தவன் வாழையையும் கொடாதவன் வாழையையும் பாடியது

வேளாளர் என்பார் விருந்துகொடுத்து உபசரிப்பதில் நாகரிகம் முதிர்ந்தவர். இன்னும் இன்னும் விருந்தினர்கள் வரமாட்டார்களோ என்று ஆவல் கொள்பவர். நல்ல விருந்தினரைக் கண்டு முகமலர்ச்சி கொள்பவர். திருக்குடந்தை என்னும் கும்பகோணத்தில் இரண்டு வேளாளர் இருந்தார்கள். ஒருவன் பெயர் திருத்தங்கி, மற்றவன் பெயர் மருத்தன். மருத்தன் விருந்துகொடுப்பதில் புகழ் பெற்றவன், மனமகிழ்ச்சி கண்டவன். அவன் வீட்டுக் கொல்லையில் உள்ள வாழைமரங்களில் குருத்து, இலை, பூ, காய், பழம் ஒன்றுமே இருப்பதில்லை. விருந்தாளிகளுக்கு எந்தநேரமும் இலையும் குருத்தும் வெட்டுவதால் அவன்வீட்டு வாழைகள் யாவும் மொட்டையாய் நின்றன.

ஆனால் திருத்தங்கி என்பவன் வேளாளனாயினும் விருந்துகொடுக்கும் அருமையை அறியாதவன். அவன் வீட்டு வாழைகள் யாவும் நன்றாகச் செழித்து அடர்ந்து பசுமையாய்ப் பூவுங் காயும் கனியும்கொடுத்து நின்றன. கொடாதவனின் செழித்த வாழையிலும் பார்க்கக் கொடுத்தவனின் மொட்டை வாழைகள் சிறந்தவை என்று ஔவையார் கருதினார். வாழைமரத்தின் காட்சியைக் கொண்டே விருந்தின் பெருமையை இனிமையாகப் பாடினார்.

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை — குருத்தும்
இலையுமிலைப் பூவுமிலைக் காயுமிலை யென்றும்
உலகில் வருவிருந்தோ ருண்டு.

---

## பாரதரத்ன ராஜாஜி

பாரதநாட்டு ஒளிமணிகளுள் ஒருவராகிய இராசகோபாலாசாரியார், நாட்டு மேதைகளுள் ஒருவர். வைதிகப் பிராமணராகிய அவர், அரசியல் துறையிலும் தமிழ், ஆங்கிலம் வடமொழி முதலாய மொழிகளிலும் நிரம்பிய அறிவுபெற்றவர். பென்னம்பெரிய விடயங்களைச் சின்னஞ் சிறுவர்களுக்கேயன்றிப் படிப்பறிவில்லாத பழங்காலத்துப் பட்டிக்காட்டாருக்கும் விளங்கவைத்தவர். திண்ணைரசாயனம் என அவர் எழுதிய தொடரில் சுண்ணும்பை வெற்றிலை பாக்கில் விளக்கி விஞ்ஞானத்தையே விபரித்தவர். விஞ்ஞானத்தைத் தமிழில் கற்பிக்க முடியும் என்று கண்டு முதலில் கலைச்சொல்லாக்கம் கண்டவர். வேத வேதாந்தக் கருத்துக்களைப் பாட்டிமார் பழங் கதைகளில் ஏற்றிப் பண்டிதர்களுக்கே விளங்கவைத்தவர். பாரதப்பண்பாட்டில் தோய்ந்த அவர், வருவாய் மிக்குள்ள வக்கீல் என்னும் நியாயவாதியுமாவர். தகர்க்க முடியாத தர்க்கரீதியாக எதனையும் எடுத்து விளக்கும் அவருக்கு வேதாந்தத்தோடு தரிசனங்கள் பகவத்கீதை, இராமாயணம், பாரதம், பாகவதம் கரைந்த பாடம். தாம் கனியக்கற்ற இராமாயணத்தையும் பாரதத்தையும், வேதாந்தத்தையும், பகவத்கீதையையும் எளியமுறையில் எழுதியவர். தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலத்திலும் அவர் எழுதிக் குவித்தவற்றை ஆங்கிலவுலகம் நன்றியறிதலோடு வாங்கிப் படித்துப் பயன்பெற்றது. சக்கரவர்த்தித் திருமகன், வியாசர் விருந்து, வேதாந்ததீபம், கைவிளக்கு, கண்ணன் காட்டிய வழி என்பன தமிழில் வெளிவந்த படைப்புக்களாகும். ஆங்கிலத்தில் அவர் கண்ட சுவந்திரா என்னும் சஞ்சிகை சுவைமிக்கது. சட்டங்கள் செய்வதில் மாத்திரமன்றி அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் அவருக்குத் திறமையிருந்தது. பாரதநாட்டுப் பண்பட்ட பழைய தலைவர்களோடு நெருங்கிப் பழகியதோடு, தமது பாலப்பருவத்தில் சுவாமி விவேகானந்தரையும் கண்ட அவர், இன்றைய சந்ததியினரும் கண்டுவணங்கும் தன்மையில் தொண்டு கிழவராய்ப் பழுத்த பழமாய் வாழ்ந்தவர். பாரதநாட்டுப் புராதன சம்பிரதாயங்களையும் தமிழிசையையும் வெளிநாட்டார் வியக்கும்வண்ணம் உலகமறியச்செய்த உத்தமர்களுள் ராஜாஜி அவர்களும் ஒருவர்.

---

## மரவள்ளி

அயர்லாந்து நாட்டில் உருளைக்கிழங்குபோல யாழ்ப்பாணத்தில் மரவள்ளிக்கிழங்கு மக்கள் உணவாகப் பயன்படுகிறது. மரவள்ளிக்கிழங்கு பலவகையாகப் பாகஞ்செய்யப்படுகிறது. கறியாக்கியும் அவித்தும் உண்டவர்கள் எஞ்சியதை வற்றலாக்கி வேண்டும்போது மாவாக்கிப் பயன்படுத்தினார்கள், இன்று சவ்வரிசி, குளுக்கோஸ் ஸ்ராச் செய்வதற்குத் தொழிற்சாலைகளில் மூலப்பொருளுள்ளது. மரவள்ளியின் கழிவுப்பொருள்கள் கால்நடைகளுக்கு நல்ல உணவாகும். பலாலி, உரும்பராய், சுன்னாகம் முதலிய இடங்கள் மரவள்ளிக்குப் பெயர்பெற்றவை நல்லூரையடுத்த நாயன்மார்க்கட்டு நல்ல கிழங்கு உண்டான காலம் ஒரு காலம். உணவுத் தட்டுப்பாட்டை நீக்க மரவள்ளி நடுவோமாக.

---

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. பொலநறுவை 2. பட்னா 3, பென்கூரியன் 4. யேம்ஸ் சிம்சன் 5, பிறேசில் 6. மெறினோ 7. ரூஸ்வெல்ட் 8. சிரியஸ் 9. மண்டலே 10. தளபதி பூத் 11. தேவசூரியசேன 12, பிளேட்டோ 13, ரூபி 14. தென்னமெரிக்கா 15. ஸ்பெயின் 16. றூபி 17. நேப்பிள்ஸ் 18. வடகோளார்த்தம் 19, செங்கடல் 20. போட்டோமாக் 21. கெடிவ் 22, சின்ரோயிசம் 23. ஓஸ்ரியோபதி 24. றமுசியோ (1559) 25. யாகூர் பாரு.

---

உலக சகோதரத்துவம் அன்பாகிய சமயத்தில் தன் அடிப்படையை வைத்திருக்கிறது. — சுவாமி சிவானந்தர்

---

★ உண்மையை மறைக்கலாம், ஆனால் அழிக்கமுடியாது ★



## மாமரம்

யாழ்ப்பாணத்தாருக்கு மாமரத்தைப்பற்றி எவரும் சொல்லத்தேவையில்லை; ஆனல் பிலிப்பீன்ஸ் நாட்டினர் நிறையச் சொல்ல வல்லவர்களாயும் நல்லவர்களாயும் உள்ளவர்களாயும் உபகரிப்பவர்களாயும் உள்ளார்கள்.

பிலிப்பீன்ஸ் நாட்டினர் தங்கள் வளவுகளில் பலஇன மாமரங்களை நாட்டி வளமிக்க வருமானத்தைப் பெறுகிருர்கள். நல்ல சுவையும் மணமும் கொண்ட மாம்பழங்கள் அங்கே கிடைக்கின்றன. அவர்கள் ஜப்பான் தேசத்தவர்களுக்கு மாம்பழங்கள் ஏற்றுமதி செய்கிருர்கள். நல்ல வருமானம் பெறுகிருர்கள்.

## இந்துப் பண்பாட்டினர்

### செய்யத் தகாதன - ஒருசில:-

சூரியன் உதித்த பின்னும் உறங்குதல்
தூங்குபவனை எழுப்புதல்
தெய்வத்தை நிந்தித்தல்
பெரியோர்களை அவமதித்தல்
பெண்களை அழவைத்தல்
பிறர் மனைவியை விரும்புதல்
கணவன் மனைவி உறவைப் பிரித்தல்
பிறர் சொத்துக்கு ஆசைப் படுதல்
குளிக்காமல் உண்ணல்
செய்யுந் தொழிலை இகழ்தல்
தொழில் பழக்கிய குருவை நிந்தித்தல்
அங்கங் குறைந்தவரை இகழ்தல்
கோயிற் சொத்தை அபகரித்தல்
கண்டபடி மரங்களை வெட்டுதல்
வீதியை அழுக்குப் படுத்தல்
நீர் நிலைகளை அழுக்குப் படுத்தல்

## திருவிழாத் தரிசனம்

எங்கும் என்றும் வியாபித்து நீக்கமற அருவமாய் உள்ள இறைவன், ஆன்மாக்களுக்காக கருணை பூத்தருளி ஆலயங்களில் திருவுருவங்களில் தம்மைத் தரிசிக்க எழுந்தருளுகின்ருர். சாதாரண நாள்களைவிடத் திருவிழா நாள்கள் என்னும் பிரமோற்சவ காலத்தில் அவர் ஆயிரக் கணக்காஞேருக்கு அருள் பாலிக்கின்ருர்.

இறைவனைக் கண்டு சேவிக்கச் செல்லும் அடியார்கள் வெறுங்கையோடு திருக்கோயிலுக்குப் போகாமல் தம்மாலியன்றவரை ஏதாவது கொண்டு செல்லுதல் பண்பாடும் விதியுமாகும். திருவிழா நாட்களில் அபிஷேகம், ஆராதனை, பூசை என்பன வெகுசிறப்பாகச் செய்யப் பெறுவன. தவறுகள், குற்றங்கள், குறைகள் தீர்வதற்காகச் செய்யப் பெறுவன யாவும் நிறைவாகவே அமைதல் வேண்டும்.

நிறைவாக நடைபெற வேண்டிய பூசைகளுக்கு எல்லோரும் உபகரித்தல் இன்றியமையாதது. யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை என்பது திருமூலர் திருவாக்கு. எம் மூதாதையர் தங்கள் வாழ்வில் முதற்பலி எனத் திருக்கோயிலுக்குப் பல பொருள்களை உபகரித்தனர். உழைப்பில் முதல் வருவாய், வயலில் விளைவு, வயலில் முதல் வருமானம் என்பன. ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பெற்றன. சாதாரணமாக ஒருவர் பெறுகின்றன பேறு என்ருற் போல, ஒருவர்கொடுப்பனவும் பேறுயமைவன திருக்கோயிலுக்குக் கொடுப்பனவாகும்.

திருக்கோயிலுக்குக் கொடுப்பனவற்றுள் எல்லோருக்கும் வசதியானவை வருமாறு:-

| | | |
|---|---|---|
| வெற்றிலை | பாக்கு | வாழைப்பழம் |
| தேங்காய் | கற்பூரம் | சாம்பிராணி |
| சந்தனம் | குங்குமம் | மஞ்சள்மா |
| பன்னீர் | அபிடேகக்கூட்டு | நெல் |
| பச்சையரிசி | நவதானியம் | சர்க்கரை |
| தேன் | நெய் | நல்லெண்ணெய் |
| தே. எண்ணெய் | இளநீர் | பால் |
| பழவகைகள் | கரும்பு | சமித்து |
| மலர் | திரிச்சீலை | முப்புரி நூல் |

## வலு

மனிதவலு, மாட்டுவலு, குதிரைவலு, யானைவலு, காற்றுவலு, நீராவிவலு, மின்வலு என்று பன்மடங்காக வலுவும் விசையும் முன்னேறிக்கொண்டு போனவீச்சில் எரிபொருட் பற்ருக்குறை, மின்சாரப் பற்ருக்குறை என்பன முன்னேற்றப்பாதைக்கு முட்டுக்கட்டையாயின.

வாயுபகவானின் பலத்தை அனுமனிடமும் வீமனிடமும் பாரதநாட்டினர் படித்தனர். ஆனல் ஒல்லாந்து நாட்டினர் ஒருபடி முன்னேறினர் என்ருல் மிகையாகாது. அவர்கள் காற்ருடியினுல் இயந்திரங்களை இயக்கப் பலவழிகளைக் கண்டனர் கையாண்டனர்.

**செல்வத்தைத் தேடாமல் அனுபவித்தல் தகாது**

## மன்னாரில் விழாக்கோலம்

மில்க்வைற் தொழிலதிபர் 19-9-81ல் மன்னருக்குச் சென்று பன்முகப் பணிகளில் ஈடுபடவேண்டியிருந்தது. அன்று காலை அபிவிருத்திச்சபை அலுவலகத்திற் பனைச் சபைக் கூட்டத்திற் பங்குபற்றியபின், சித்த ஆயுர்வேத நிபுணர் யோண் மாக் அவர்கள் செய்த விருந்துபசாரத்திற் பங்குபற்றினர். யோண் மாக் அவர்கள் பழைய பனையபிமானி.

மன்னாரிலுள்ள நூல்நிலையம் நல்லசூழலில் சுகாதார மான முறையில் அமைந்துள்ளது, வாசிகசாலை, நூலகம் சிறுவர் நூலகம் என முப்பெரும் பிரிவுகளாக இயங்கும் நிறுவனத்திற்கு மில்க்வைற் தொழிலதிபர் அறிவுநூல்களை உபகரித்தமையைப் பெரியவர்கள் பாராட்டினார்கள்.

அன்று மாலை மன்னாரில் நடைபெற்ற கூட்டுறவாளர் தினம் கோலாகலமாக நடைபெற்றது. பல்வேறு நிகழ்ச்சிகள் பரபரப்பான முறையில் போட்டியடிப்படையில் நடைபெற்றதை அரசாங்க அதிபர் திரு ஒஸ்ரின் ஜெயவர்த்தன உட்படப் பல பிரமுகர்கள் பார்த்து மகிழ்ந்தனர். எருக்கலம்பிட்டிவாழ் வயதுவந்த முஸ்லிம் பெருமக்கள் துள்ளிப்பாய்ந்து கோலாட்டம் அடித்தமை பெருவிருந்தாயிருந்தது. மன்னார், முசலி, மாந்தை, நானாட்டான் முதலிய பகுதிகளிலிருந்து ஊர்வலமாக வந்த நடமாடும் விற்பனைப் பகுதிகள் தனியழகைக் கொடுத்தன. போட்டியடிப்படையில் நடைபெற்ற இவ்விழாவில் கவர்ச்சிகரமான பெரும் பரிசில்கள் வழங்கப்பெற்றன. பரிசளிப்பில் கலந்துகொண்ட தொழிலதிபர் கனகராசா அவர்களை அரசாங்க அதிபரும் மாவட்டசபைப் பிரதிநிதிகளும் வர்த்தகர்களும் பாராட்டினார்கள்.

## சாப்பாட்டு விதிகள்

''நல்ல சாப்பாடு'' என்று யோகசுவாமிகள் அடிக்கடி கூறுவார்கள். உனக்குச் சாப்பிடத் தெரியுமோ? என்று கேட்பார்கள். உனக்குப் பாடத்தெரியுமோ என்பார்கள். நல்ல சா வேண்டுமானால் பாட்டுப் பாடவேண்டும் என்றெல்லாம் சிலேடையாகப் பேசுவார்கள். வெள்ளைக்காரர் மேசைப்பழக்கத்தைப் பெரிதாக மதிப்பர். தமிழ்ப் பண்பாட்டில் நல்ல பாரம்பரியம் உண்டு. கைப்பனவெல்லாம் கடை என்பதில் அறுசுவையுண்டியில் கைப்பான சுவையைக் கடைசியில் உண்ணல்வேண்டும் என்பர். அதில் சமிபாட்டு இரகசியம் உண்டு. சமிபாட்டுச் சுரப்பிகளை அது கட்டுப்படுத்தும். சாப்பிடும்போது மௌனமாக இருத்தல் இயன்றளவு பேச்சைக்குறைத்தல் விதி. உண்ணும்போது நோக்கும் திசைகளுக்கும் தமிழர் பயன்கண்டுள்ளார்கள். கிழக்கு ஆயுள், தெற்கு கீர்த்தி, மேற்கு செல்வம், வடக்கு சத்தியம் உண்டாக்கும் என்பர்.

### உடல் வளர்ச்சிக்கு உலோக உப்புகள்

எங்கள் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உலோக உப்புகள் தாவர உணவுப் பொருள்களிலே நிறைய உண்டு. எமக்கு வேண்டிய உப்புகளில் கல்சியம், பாஸ்வரம், இரும்பு பிரதானமானவை என்பர்.

**கல்சியம் உப்பு:** பால், பயறு, அகத்தி, முருங்கை, கீரை, தானியங்கள் முதலியவற்றில் நிறைய உண்டு.

**பாஸ்வரம் உப்பு:** பயறு, தானியங்கள், எள், கடலை முதலியவற்றில் நிறையவுண்டு,

**இரும்பு உப்பு:** கீரை, அகத்தி, முருங்கை முதலியவற்றில் மிகுதியாகவுண்டு.

இன்னும் முள்ளங்கி, ரேனிப்ஸ், கரட், நூகோல், உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு என்பனவும் நல்லவை என்பர்.

## நெல்லிமரம்

தமிழ்நாட்டுப் பெரியார்கள் பலரும் எங்கள் நாட்டுச் சித்தவைத்தியர்கள் பலரும் நெல்லியின் நன்மைகளை அடிக்கடி தொழிலதிபர் கனகராசா அவர்களுக்கு எழுதியும் நேரில் ஊக்குவித்தும் வருகிறார்கள். இன்னுஞ் சிலர் நூற்றுக்கணக்கான நெல்லிக்கன்றுகளை உண்டாக்கி எல்லோருக்கும் உபகரிக்குமாறு கொடுக்கின்றார்கள். அப்பிள் பழத்திலும்பார்க்க அதிக சத்துள்ள நெல்லிக்கனி உயிர்ச்சத்துக் குளிகைகளிலும் பார்க்க உத்தமமானது. உடம்புக்கு உறுதி தருவது. வற்றலாக்கியும் ஊறுகாய் செய்தும் உபயோகிக்கத்தக்கது. தயவுசெய்து வளவு வசதியுள்ளவர்கள் நெல்லிமரங்களை வளர்த்துப் பயன் படுத்துவார்களாக.

## குடிசனத்தொகை

நூறு வருடங்களுக்குமுன் 1881ம் ஆண்டில் இலங்கைக் குடிசனத் தொகை 27,59,738.

## மாதர் பகுதி

எங்கெங்கே பார்க்கினும் சக்தியடா என்று பாரதியார் பாடியவண்ணம் எங்குப்பார்த்தாலும் பெண்மயமாயிருக்கும் காலத்தில் பெண்மைப் பயிற்சியும் அதிகரித்தல் வேண்டும். குடும்பநிர்வாகம், குடும்பப்பொறுப்பு, மனையியல், உடல்நலம் பேணல், போஷணை, சேமிப்பு, வீட்டுப் பணி, அடக்கம், நாணம் இவைபோன்ற நல்லியல்புப் பயிற்சிவேண்டும். ஐக்கியநாடுகளின் கல்வி கலாசாரப் பிரிவு நிபுணர்களாக திருவாட்டிகள் மிலன், டிறேக் முதலானவர்கள் தென்னிலங்கையிலே மாதர்க்குரிய பயிற்சிகளை முன்னர் நடத்தினர். ஸ்ரீலங்கா மகில சமிதி புகழ் பூத்த மாதர் சங்கமாய் அமைந்திருந்தது. அதுபோல் முன்னர் யாழ்ப்பாணத்தில், திருநெல்வேலி, பண்டத்தரிப்பு முதலிய இடங்களிலும் நடைபெற்றன. பாராளுமன்றத் தொகுதிகள் தோறும் மாதர்சங்கங்கள் உருவாகிப் பணிசெய்தல் மாண்புடைத்தாகும். அண்மையில் வண்ணார்பண்ணையில் மன்றமில்லாமலே மாதர் சங்கமொன்று மகத்தான பணிபுரிந்து தமிழும் சைவமும் வளர்த்துவருதல் பாராட்டற்பாலது.

★ முகமலர்ச்சி இல்லாதவர் வியாபாரஞ் செய்ய உதவார் ★

## தமிழில் வரும் வடமொழிகள் சில

நியமம் — ஒழுங்கு, நாட்கடமை
நியமித்தல் — அமைத்தல்
நியாயம் — நெறி, முறை
நியோகித்தல் — செலுத்துதல்
நிரந்தரம் — எப்பொழுதும்
நிராகரணம் — மறுத்தல்
நிராசை — பற்றின்மை
நிராதாரம் — பற்றுக்கோடின்மை
நிரீச்சுரவாதி — கடவுள் இல்லையென்போன்
நிரீட்சணம் — பார்த்தல்
நிர்ணயம் — உறுதி
நிருத்தம் — கூத்து
நிருபன் — அரசன்
நிரூபித்தல் — மெய்ப்பித்தல்
நிருமலம் — மாசின்மை
நிருமலன் — மாசிலான்
நிருமித்தல் — உண்டாக்குதல்

## ஆழ்ந்த அனுதாபங்கள்

### அமரர் தம்பிமுத்து ஆறுமுகம் அவர்கள்

(1922-10-11—1981-07-13)

அமரர் தம்பிமுத்து ஆறுமுகம் அவர்களின் மறைவைப் பற்றி கிழக்கு மாநிலக் கோமாரி இந்து இளைஞர் மன்றச் செயலாளர் கு. விவேகானந்தர் எமக்கு அறிவித்திருந்தார் தமிழுக்கும் சைவசமயத்திற்கும் அரும்பணிபுரிந்த அமரர் சாதாரண தொழிலாளியாக இருந்தபோதிலும் பெருமளவில் பணிபுரிந்தார் என்பர். அன்னார் 1971ம் ஆண்டில் இந்து இளைஞர் மன்றத்தை ஆரம்பித்துத் திறமையாக நடத்திவந்தார். கோமாரியில் முருகன் ஆலயம் அமைப்பதற்கு வேண்டிய பூர்வாங்க வேலையை இராமகிருஷ்ண மடத்துப் பெரியார் ஜீவனானந்த சுவாமிகளைக்கொண்டு ஆரம்பித்துவைத்தார்.

## விதுர நீதி ஒன்று

விதுரர் பாண்டவர் கௌரவரின் சிற்றப்பன். வியாசரின் பூரண அனுக்கிரகம் பெற்றவர். திரிகால நிகழ்ச்சிகளை உணர்ந்தவர். நல்லவர். அவர் கூறிய சுகந்தரும் வழிகள் ஆறு வருமாறு:-

1. நோயற்ற வாழ்வு
2. கடன் இல்லாமல் வாழ்தல்
3. சுற்றஞ்சூழ வாழ்தல்
4. நல்லவரை நட்புக்கொள்ளல்
5. சுயபுத்தியை இழக்காதிருத்தல்
6. அச்சமில்லாமல் வாழ்தல்

## நல்வாழ்வுக்குத் தேவையானவை

1. காற்று, 2. தண்ணீர். 3. உணவு, 4. உடை 5. உறைவிடம், 6. கல்வி, 7, செல்வம், 8. நிம்மதி.

## மௌனம் நிலவுக

யோக சுவாமிகள் மௌனத்தின் பெருமதியை நன்கறிந்தவர். அவர் இடையிடை வெளியில் உலாவி எல்லோருடனும் கலந்துரையாடி அவர்களை நல்வழிப்படுத்தி வந்தாலும், தமது மௌன நிலையில் உறுதியான போக்கைக் கைவிடாதவர். மௌனம் நிலவுக என்பது அவரின் வாக்கியம். மௌனம் குளிர்ச்சியான அமைதி தருவது அண்டவெளியில் அமைதி. நடுச்சமுத்திரத்தில் அமைதி. நடுச்சாமத்தில் அமைதி: வாழ்க்கையின் முதலிலும் முடிவிலும் அமைதி. மௌனநிலையில் மனம் அமைதி பெறுகிறது. புலன்கள் அடங்குகின்றன.

## அடுக்குமொழி

மிச்சம் சொச்சம்
மிச்சம் மீதி
மிஞ்சாமல் கெஞ்சாமல்
மிடுக்கும் செருக்கும்
மிதித்து துவைத்து
மிருட்டல் உருட்டல்
மின்னல் முழக்கம்
மினுக்கித் தளுக்கி
முக்கல் முனகல்
முக்காலும் மூன்றுதரம்
முக்கி முனகி
முட்டி மோதி
முண்டு முடிச்சு
முத்தி மோந்து
முதலும் முடிவும்
முள்ளும் முனையும்
முற்ற முடிய
முற்றி முதிர்ந்து
முற்றுந் துறந்து
முனிவரும் மன்னரும்
மூட்டை முடிச்சு
மூக்கும் முளியும்
மூடி மறைத்து

## அரசாங்க சபை

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 1931-7-7இல் ஆரம்பித்து அரசாங்க சபையில் பெல்வீஸ் கோடன் என்னும் வெள்ளைக்காரத் தோட்டத்துரை பண்டாரவளைப் பிரதிநிதியாகப் பொதுமக்களால் தெரியப்பெற்ருர்.

முன்னர் அனுரதபுரத்து அரசாங்க அதிபராயிருந்த பிரீமன் துரை சட்டசபையிலும் தெரியப்பெற்றிருந்தவர்: அனுரதபுரத்துப் பிரதிநிதியாக அரசாங்கசபையிலும் தெரியப்பெற்ருர்.

கடவுளனுபூதி பெறுவதற்கு, கலையோ விஞ்ஞானமோ உங்களுக்கு வேண்டியதில்லை. ஆனல் சிரத்தை, தூய்மை, பக்தி என்பவையே வேண்டும். — சுவாமி சிவானந்தர்

★ பலருடன் பழகினுலும் ஒருசிலரே நண்பர்கள் ★

## கிரகணம்

இரவுபகல், அமாவாசை பூரணை என்பனவற்றை நாம் அனுபவத்தில் அறிகிறோம். நாம் வாழும் பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது. நாம் காணும் சந்திரன் எங்கள் பூமியைச் சுற்றியவாறே சூரியனை வலம்வருகின்றது. பூமி தன்னைத்தானே சுற்றியவாறு சூரியனை வலம்வருகின்றது. இங்ஙனமாகப் பூமி, சந்திரன், சூரியன் என்னும் மூன்றும் சிலவேளைகளில் ஒரே நேராக வருதலும் உண்டு. சில அமாவாசைகளில் இங்ஙனம் இம்மூன்றும் மிக நேராக வரும்போது, சந்திரன் சூரியனை மறைக்கும்பொழுது, சூரிய கிரஹணம் உண்டாகிறது. இவ்வாறே சில பூரணை இரவுகளில் சூரியனின் கிரணம் சந்திரன்மீது படிவதைப் பூமி தடுக்கிறது. இதனால் சந்திரன் மறைக்கப்படவே சந்திர கிரகணம் உண்டாகிறது. சூரிய கிரகணம் ஏறக்குறைய ஏழு எட்டு நிமிட நேரம் நிலவும். சந்திர கிரகணம் ஏறக்குறைய நூறுநிமிட நேரம் நிலவும். இங்ஙனம் நிலவும் கிரகணங்கள் ஆண்டுதோறும் நிகழுமெனினும் சிலவேளைகளிலேதான் நாம் அவற்றை அவதானிக்கலாம். ஆண்டுதோறும் ஏழு கிரகணங்கள் நிகழ்கின்றன. இவற்றில் சூரிய கிரகணம் அதிகமாகும். சிலசமயம் ஐந்து சூரிய கிரகணங்கள் உண்டாவதும் வழக்கமாகும். கிரகணத்தை வெறும் கண்ணுற் பார்த்தால் கண் பார்வைக்குப் பழுது என்பதை எப்பவோ மநு கூறியதை இன்று விஞ்ஞானிகள் வழிமொழிந்துள்ளார்கள்.. கடந்த 1973-6-30ம் நாளில் நடைபெற்ற சூரிய கிரகணம் நீடித்த நேரம் நிலவியது என்பது ஆராய்ச்சியாளர் அவதானம்.

## திரிபுர சுந்தரி

அம்பிகையின் அருளால் அவள் அருமையை அறிந்து இன்புறலாம். அவள் அழகைப் பருகலாம். ஆனந்தம் அடையலாம். அவள் கருணையால் அநுபூதி பெறலாம். வரண்ட வார்த்தையால் உலர்ந்த உள்ளத்தில் அவளை உணர முடியாது. அவளை அறிந்து அவளாக மாறிய அநுபூதிமான்களுள் அண்மையில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒருவர். அன்னை எல்லாவற்றுக்கும் ஆதாரமான பேருண்மையாக இருக்கிறாள். அவள் விழிப்பு, கனவு, தூக்கம் என்னும் மூன்று நிலைகளிலும் ஊடுருவி அநுபவமாயுள்ளாள். இன்னும் இச்சை, ஞானம், கிரியை என்னும் நிலையிலும் உள்ளாள். அவளே சத், சித் ஆனந்தம் என்னும் நிலையுமாவள். திரிபுரா சுந்தரியாகத் தோன்றுகிறாள். அவை அவளின் அழகின் அலைகள்.

## தமிழர் ஒன்றியொதுக்கல்

தமிழர் அரசாங்கசபைத் தேர்தலை 1931ம் ஆண்டில் பகிஸ்காரம் செய்தமையால் யாழ்ப்பாணத் தொகுதிகள் நான்கில் - யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேயன் துறை, பருத்தித்துறை தேர்தல்கள் நடைபெறவில்லை. தமிழரின் பெருந்தன்மை, ஒத்துழைப்பு, ஒற்றுமை புகழ் மணத்த காலம் அது.




மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே உதவுகிறது.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்துக்கொடுத்து
பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## உடையார் ஐயாவின் ஊக்கம்

விதானையார், உடையார், மணியகாரன் முதலிய உத்தியோகங்கள் இன்றில்லை. பழைய உடையார் பாரம் பரியத்தில் வந்த பொன்னுவெளி உடையார் திரு. கு. அருளம்பலம் அவர்கள் எண்பதுக்கு மேலாகியும் இன்றும் திருக்கேதீஸ்வரத்து வடக்கு வெளி வீதியில் உழைத்த வண்ணம் வாழ்கின்றார். முன்னர் திருக்கேதீஸ்வரத்துத் திருமுறைக் கோட்டத்துக்குத் தேவாரத்திருமுறைகளைப் பனையோலை ஏட்டில் எழுதியுதவியவர் இன்று திருமந்திரங்களையும், திருக்கோவையாரையும் எழுதி வருகிறார். இதனைக் கேள்வியுற்ற திருக்கோணேஸ்வரத்துப் பரிபாலன சபையார் தங்கள் திருக்கோயிலுக்கும் திருமுறை ஏடுகளை எழுதித்தருமாறு கேட்டுள்ளார்கள். உடையார் ஐயா இன்னும் பல்லாண்டுகள் ஆரோக்கியதிடகாத்திரராய் வாழ்ந்து சைவத் தொண்டு புரிவதற்குக் கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வர நாதன் திருவருள் பாலித்தல் வேண்டுமென மில்க்வைற் தொழிலதிபர் உடையார் ஐயா அவர்களை நேரில் வாழ்த்திப் போற்றினர். உடையார் தினமும் எழுபது பாடல்கள் எழுதிவருகிறார்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-10-81.